**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ஆம் நாள் திங்கட்கிழமை

TNTV06-000149-2024

**அசல் வழக்கு எண்.117/2024**

பழனி .... வாதி

**//எதிர்//**

1. மோகனவள்ளி
2. நதியா
3. செந்தில்குமார்
4. பிரியா
5. செல்வகுமார்
6. சார்பதிவாளர்,
   திருத்துறைப்பூண்டி.
7. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர்,
   திருவாரூர். .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கந்தசாமி, M.C.A., M.L., அவர்களும், 6, 7ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V.சச்சிதானந்தம், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 பிரதிவாதிகள் நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பியும் நீதிமன்றத்திற்கு வருகை இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ யாதொரு இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தினை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் யாதொரு பாராதீன அவணங்களோ, வில்லங்கங்களோ, பதிவுகளோ செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :-**

**2.1.** வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ யாதொரு இடையூறும் ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தினை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் மோசடியான ஆவணங்களை கொண்டு வேறு 3 வது நபர் பெயரில் 6ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் எவ்வித பாராதீன ஆவணங்களோ, வில்லங்கங்களோ, பதிவுகளோ செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.2.** மேற்படி வழக்கு சொத்தானது வாதியின் தகப்பனாரான ராமையா பிள்ளை என்பவரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்து அவரது இறப்பிற்கு வாதியின் குடும்பத்தினருக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின் மூலம் வாதிக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்களாகும். அதன்படி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களில் அவரவர்கள் சாகுபடி செய்து அனுபோகம் செய்து வந்துள்ளார்கள். வாதி

அவருக்கு வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தில் சாகுபடி செய்து வருகிறார். தாவா சொத்துக்கள் வாதி மற்றும் வாதியின் சகோதரர் சண்முகம் பெயரில் கூட்டுப்பட்டாவில் இருந்து வந்த சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை வாதியின் மற்றொரு சகோதரரான சுவாமிநாதன் என்பவர் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து அவரது பெயரில் பட்டா மாற்றி வைத்துள்ளார். மேற்படி வாதியின் சகோதரரான சாமிநாதன் இறந்துவிட்டார். தற்சமயம் மோசடியாக வாதியின் சகோதரர் பெயரில் பட்டா இருந்து வருவதால் அதனை அனுகூலமாக எடுத்துக்கொண்ட 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தினை வாதியிடமிருந்து அக்கிரமிக்கும் முயற்சியில் வாதிக்கு அவ்வப்போது இடையூறு ஏற்படுத்தி வருகிறார்கள். மேற்படி வாதியின் அமைதியான அனுபவத்தில் சாகுபடி செய்து வரும் நிலங்களை எப்படியேனும் ஆக்கிரமித்தே தீருவோம் என கடந்த 25.08.2024 ம் தேதியில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியின் அனுபவத்திற்கு தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தியதால் வாதி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்து நிறுத்தியுள்ளார்.

**2.3.** மேற்படி வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள சொத்தினை அபகரிக்கும் நோக்கத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் 6 ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் வேறு 3 ம் நபர்களுக்கு ஆவணம் ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறார். மேற்படி வாதிக்கு உரிமையுடைய சொத்தினை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் 6 ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் வேறு ஏதேனும் 3 ம் நபரின் பெயரில் பாராதீன ஆவணங்கள் ஏற்படுத்தும் பட்சத்தில் வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதோடு பல்வேறு வழக்கு வியாஜ்ஜிய மூலங்கள் ஏற்படும் என்று வாதி தெரிவித்துள்ளார். வழக்கில் 6 ம் பிரதிவாதி

அவசிய தரப்பினர் என்ற வகையில் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். 6 ம் பிரதிவாதி உயர் அதிகாரி என்ற வகையில் 7 ம் பிரதிவாதி இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**2.4.** எனவே வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ யாதொரு இடையூறும் ஏற்படுத்த கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு சொத்தினை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் மோசடியான ஆவணங்களை கொண்டு வேறு 3 வது நபர் பெயரில் 6 ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் எவ்வித பாராதீன ஆவணங்களோ, வில்லங்கங்களோ, பதிவுகளோ செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>6 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம் :- (அதனை 7 ம் பிரதிவாதி தனதாகவும் ஏற்றுக்கொள்கிறார்)</u>**

**3.1.** வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. வாதி அவரது வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளில் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை இந்த பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார்.

**3.2.** தாவாவில் கண்டுள்ள விபரங்களை ஆவண சாட்சியம் மூலமும் வாய்மொழி சாட்சியம் மூலமும் சந்தேகமற நிரூபிக்க வாதியே கடமைப்பட்டுள்ளார். பிரதிவாதிகளுக்கு எந்த ஒரு பரிகாரம் கோரப்படாமலும் 6 மற்றும் 7 பிரதிவாதிகளை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கிடப்பட்டுள்ளது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல. 6 மற்றும் 7 பிரதிவாதிகள்

பொதுமக்களுக்கு கடமையாற்றும் அலுவலர்கள் என்பதால் மேற்படி 6 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் ஏற்பட்டதாக வழக்கில் குறிப்பிட்டு கூறப்படாமலும், 7 ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரப்படாத நிலையிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல.

3.3. மேற்படி பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையையும் தக்க வைத்து கொள்கிறார். ஆகவே, வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை 6, 7 பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 6, 7 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

4) இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**எழுவினாக்கள் ;-**

01. Whether the plaintiff has in possession and enjoyment of the suit property?
02. Whether the plaintiff entitle the relief of Permanent injunction against D1 to D5 defendants as prayed for?
03. Whether the plaintiff entitle the relief of Prohibitory Injunction against Defendants as prayed for?
04. To what other relief to the both parties ?

5) வழக்கு ஆவணங்கள், வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ததில், கூடுதல் எழுவினா அவசியம் என கருதியதால் கீழ்கண்டவாறு கூடுதல் எழுவினா வனையப்பட்டது.

**கூடுதல் எழுவினா :-**

01. Whether the plaintiff entitle the relief of Permanent injunction against D1 to D5 in D6 office not to alienate the suit property as prayed for?

**6) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் :-**

வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வாதி பழனி வா.சா.1 ஆகவும், ஜான் வில்லியம் என்பவர் வா.சா.2 ஆகவும், மரிய சூசை என்பவர் வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**7) வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

வாதியானவர் தாவா சொத்தில் உடமையிலும், அனுபோகத்திலும் இருப்பதை பிரதிவாதியானவர் இடையூறு செய்வதை வாதியானவர் தனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் தாவா சொத்து குறித்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

**8) பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

1 முதல் 5 பிரதிவாதிகள் நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பியும் நீதிமன்றத்திற்கு வருகை இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். 6, 7 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராமல் தரப்பினர்களாக சேர்த்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு 6, 7 பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 6, 7 பிரதிவாதிகளின் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வாதம் செய்தார்.

9) **<u>தீர்வு</u> :-**

**<u>எழுவினா -1, 2 மற்றும் கூடுதல் எழுவினாக்கான தீர்வுகள் :-</u>**

i) வாதியின் அனுபோகத்திலும், உடமையிலும் உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதியை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) தாவா சொத்தானது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, திருத்துறைப்பூண்டி சார்பதிவகம் கருப்புக்கிளார் வருவாய் கிராமத்தில் இருந்து வருவதாக வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

iii) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி பழனி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 30.08.2024 ம் தேதியிட்ட வாதியின் ஆதார் அட்டை சான்றிட்ட நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 12.02.2019 ம் தேதியிட்ட சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 06.04.2018 ம் தேதியிட்ட அ பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 15.03.2016 ம் தேதியிட்ட சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகவும், பட்டா கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ஜான் வில்லியம் என்பவர் வா.சா.2 ஆகவும், மரிய சூசை என்பவர் வா.சா.ஆ.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

iv) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதியின் ஆதார் அட்டை நகல் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது பிரதிவாதிகளின் தந்தை சாமிநாதன் பெயரில் உள்ள கணினி சிட்டா என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.4

ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது பழனி மற்றும் சண்முகம் பெயரிலிருந்து பிரதிவாதிகளின் தந்தை சாமிநாதன் பெயருக்கு பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கான பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தானது 06.04.20218 தேதியில் பிரதிவாதிகளின் தந்தை சாமிநாதன் பெயரில் உள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி தாவா சொத்தானது 2018 ம் தேதியில் பிரதிவாதிகளின் தந்தையின் அனுபோகத்தில் உள்ளதை தற்போதும் பிரதிவாதிகளின் அனுபோகத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு கொண்ட பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

v) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ள அ-பதிவேடு நகல் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி 08.10.2024 ம் தேதியில் தாவா சொத்தானது பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 15.03.2016 ம் தேதியில் தாவா சொத்தானது பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ள சிட்டா கணினி நகல் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 19.10.2016 ம் தேதியில் தாவா சொத்தானது பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ள சிட்டா கணினி நகல் என்பது தெரிய வருகிறது.

vi) மேற்படி வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தானது 2016 ம் ஆண்டு பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ளது என்பதும்,

வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் 2024 ம் தேதியில் அதே வாதி பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ளது என்பதும் தெரிய வருகிறது. மாறாக வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களானது 06.04.2018 ம் தேதியில் பிரதிவாதிகளின் தந்தை சாமிநாதன் பெயரில் உள்ள சிட்டா மற்றும் பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களுக்கு முன் தேதியிலும், பின் தேதியிலும் தாவா சொத்துக்கள் வாதி பழனி மற்றும் சண்முகம் பெயரில் உள்ளது என்பது தெரிய வருகிறது.

vii) பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ-2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து சாமிநாதனுக்கு எதன் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றும், தற்போது தாவா சொத்து தங்களுடைய அனுபோகத்தில் உள்ளது என்பதையும், 1 முதல் 5 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். மேற்படி வாதியானவர் தாவா சொத்தானது தனது உடமையிலும், அனுபோகத்திலும் உள்ளது என்பதை தனது தரப்பு சாட்சியத்தை கொண்டு மேற்கண்ட ஆவணங்கள் மூலம் குறியீடு செய்து வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ஜான் வில்லியம் என்பவர் வா.சா.2 ஆகவும், மரிய சூசை என்பவர் வா.சா.3 ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். ஆகவே, தாவா சொத்தானது வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் தற்போது வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் உள்ளது என்றும், தாவா சொத்து குறித்து வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா 1, 2 மற்றும் கூடுதல் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

10) <u>எழுவினா - 3 க்கான தீர்வு</u> :-

தாவா சொத்து குறித்து வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளதால் இதர பரிகாரங்கள் ஏதும் இல்லை என்றும், வழக்கின் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென எழுவினா 3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

11) முடிவில்,

1. தாவா செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.
2. வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ யாதொரு இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தினை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் யாதொரு பாராதீன அவணங்களோ, வில்லங்கங்களோ, பதிவுகளோ செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.16 18:07:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.பழனி (வாதி), த/பெ.ராமையா. |
| வா.சா.2 | திரு.ஜான் வில்லியம் (3ம் தரப்பினர்), த/பெ.கோவிந்தன். |
| வா.சா.3 | திரு.மரிய சூசை (3ம் தரப்பினர்), த/பெ.யோவான். |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.08.2024 | வாதியின் ஆதார் அட்டை சான்றிட்ட நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது). |
| வா.சா.ஆ.2 | 30.08.2024 | சிட்டா கணினி நகல். |
| வா.சா.ஆ.3 | 06.04.2018 | அ-பதிவேடு சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.4 | -- | பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல். |
| வா.சா.ஆ.5 | 15.03.2016 | சிட்டா கணினி நகல். |
| வா.சா.ஆ.6 | -- | பட்டா கணினி நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.16 18:07:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.